முடைய தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) இத்தனை கோடி ரூபாய் செலவு செய்து நெல் கொள்முதல் செய்து அதை நல்ல அரிசியாக அரைத்துக் கொடுக்க முடியாமல் ஏன் இருக்கிறது என்பதை ஆராய்ந்து, இந்த அரிசி ஆலைகளை எல்லாம் பெயருக்கு ஏற்றபடி நவீனஅரிசி ஆலையாக ஆக்குவதற்கு என்னதிட்டம் என்பதை மிகத் தீவிரமாகப் பரிசீலித்து கொண்டிருக்கிறார்கள். மாடர்ன் டெக்னாலஜி, அமெரிக்கன் டெக்னாலஜி, தாய்லாந்தில் எப்படி அரிசி மிகச்சிறந்த முறையில் தயாரிக்கப்படுகிறது. என்பதை எல்லாம் அவர்கள் ஆராய்ந்து அதற்கான மிக முக்கியமான முடிவுகளை அறிவிக்க இருக்கிறார்கள். அது நம்முடைய நிதிநிலை அறிக்கையில் கூட மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்து அதன்மூலம் நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் அறிவிக்க இருக்கிறார்கள். அப்போது இந்த 23 ஆலைகளையும் மிகச்சிறந்த ஆலைகளாக எதிர்காலத்தில் மாற்றி நல்ல அரிசியை, தரமுள்ள அரிசியைத் தருவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் மகிழ்ச்சி அடைகிற வகையில் அந்த முடிவுகள் வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10.25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 24 திருமதி என். கனகவல்லி இருக்கையில் இல்லை.

வினா எண் 25 திரு. வே. தம்புசாமி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்,

25—

திருவாரூர் வட்டம் நாட்டிரப்பு ஆதிதிராவிடர் குடியிருப்புக்கு போக்குவரத்து வசதி ஏற்படுத்துதல்.

* 19857— திரு. வே. தம்புசாமி:

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் வட்டம் கீவளூர் ஒன்றியம் நாட்டிரப்பு ஆதிதிராவிடர் குடியிருப்புக்கு போக்குவரத்து வசதி ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ஏற்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர்அவர்களே,

[1994 மார்ச் 18

(அ) மற்றும் (ஆ) நாட்டிரப்பு கிராமத்திற்கு செல்லும் சாலை மண் சாலையாக இருப்பதால் பேருந்து இயக்க இயலாது.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டிரப்பு கிராமம் என்பது ஒரு உள்கிராமம். சுற்றி வடக்கு பனையூர், தெற்கு பனையூர், முப்பத்தி கோட்டை, வல்லவநாயன்கோட்டை, மேலவடகரை ஆகிய பகுதிகளைக் கொண்டிருக்கிற ஒரு கிராமமாகும். ஆகவே இந்த நாட்டிரப்புக்கு ஜனங்கள் போய் வருவதற்கு, விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய நெல்லைக்கூட கொண்டு வர முடியாத நிலைமை இருந்து கொண்டு இருக்கிறது. ஆகவே அப்படிப்பட்ட பகுதிக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு பேருந்தை விடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூரிலேயிருந்து கீவளூர் வரையிலும் ஏறத்தாழ பேருந்துகள் 428 நடைகள் சென்று கொண்டிருக்கின்றன. அந்தக் கிராமம் ஏறத்தாழ 1.60 கிலோ மீட்டரிலே இருக்கிற காரணத்தாலே மண் சாலையிலே இருக்கின்ற காரணத்தாலே அங்கே பேருந்துகளை இயக்க முடியவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தச் சாலைகளை மெட்டல் சாலைகளாகப் போட்டவுடன்-அது ஆற்றோரப் பகுதியாக இருக்கிறது, ஆகவேதான் பேருந்தை இயக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது என்று குறிப்புகள் எனக்குத் தரப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உள்ளாட்சித்துறையின் சார்பாக சாலைகளை அமைப்பார்களானால் உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேரடியாக நாட்டிரப்புக்கு மண் சாலை இருப்பதால் பேருந்துகளை இயக்க முடியாத நிலைமை இருந்தாலும் நாட்டிரப்புக்கு வடபுறம் நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான சாலை உள்ளது. அது சாத்தியக்குடியிலிருந்து வடக்குப் பனையூர் வரையில் நல்ல நிலையில் இருக்கக்கூடிய சாலையாக இருக்கிறது. அந்தச் சாலையில் காலையில் ஒரு முறை மாலையில் ஒரு முறை என்று இரண்டு முறையாவது வடக்குப் பனையூர் வரையில் பேருந்துகளை இயக்குவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர், அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை அரசு பரிசீலிக்கும். (குறுக்கீடு).

1994 மார்ச் 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேரம் ஆகிவிட்டது. (குறுக்கீடு) இது பொதுவான கேள்வி அல்ல. (குறுக்கீடு) திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகை—காயிதே மில்லத் மாவட்டம், தஞ்சை மாவட்டம் முழுவதும் சோழன் போக்குவரத்துக் கழகத்தினுடைய பேருந்துகள் இயங்கிக் கொண்டு வருகின்றன. சோழன் போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்தவரையில், அங்கே ஓடிக் கொண்டிருக்கிற பேருந்துகள் யாவும், நகரப் பேருந்துகள் யாவும், மிகமிக மோசமாகப் பழுது அடைந்து இருப்பதால், அவைகளைப் புதிதாக மாற்றுவதற்கு. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைத்தான் நான் சொன்னேன். (குறுக்கீடு) கேள்விக்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லாம். அந்த ரூட்டிலே பஸ் போவதைப் பற்றி வேண்டுமனால் கேட்கலாம். (குறுக்கீடு). இந்த மாதிரி உங்களை அனுமதித்தால், மற்ற எல்லா உறுப்பினர்களையும் நான் அனுமதிக்கவேண்டியது வரும். (குறுக்கீடு). அது வேண்டாம். (குறுக்கீடு). அமைச்சர் அவர்கள் பதில் சொல்லலாம். ஒரு தொகுதி சம்பந்தப்பட்ட பிரச்சினைக்கு இன்னொரு உறுப்பினரைக் கேள்வி கேட்க அனுமதித்தால், பிறகு எல்லோரும் கேட்பார்கள். அந்த ரூட்டுக்கு இடையிலே ஒரு கிராமம் வருகிறது. அதற்குப் பஸ் போகுமா என்று கேட்டால், அது சரியாக இருக்கும். (குறுக்கீடு). அதற்குத் தனிக் கேள்வி போடவும்.

வினா எண். 26, திருமதி. க. பழனியம்மாள், மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

26—

கூட்டுறவு நூற்பாலைகளுக்கு தொழில்நுட்ப ஆலோசனைக் குழு அமைத்தல்.

*22426—திருமதி க. பழனியம்மாள்:

மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

கூட்டுறவு நூற்பாலைகள் திறம்பட செயல்பட உதவும் வகையில் தொழில்நுட்ப ஆலோசனைக் குழு ஒன்று அமைத்திட அரசு முன்வருமா ?